1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.532/2015

01.02.2024. வா.சா. 2 திரு. பிரேம்குமார்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞரிடம் சொல்லி சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு குறித்த விவரம் அனைத்தும் வாதி கூறினார் என்றால்சரிதான். நான் கூறும் முதல் விசாரணை விவரங்களை வாதி வழக்கறிஞரிடம் கூறி நிருபண வாக்குமூலம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. நான் கூறி தயார் செய்யப்பட்டது. தாவா 1ம் தபசில் 2ம் அயிட்ட சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு வடக்கு பக்கம் எல்கை கிழமேல் முடுக்கு உள்ளது என்றால் தெரியாது. பிராதில் உள்ள தபசில் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சொத்துகள் அளவுகள் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. 3 அடி முடுக்கு என்று தெரியும். 3 அடி முடுக்கின் கிழமேல் நீளம் தெரியாது.

2. வழக்கு சொத்தின் ஆவணங்கள் எதுவும் பார்த்தது இல்லை என்றால் சரிதான். அதன் எல்கை விவரங்கள் தெரியாது என்றால்சரிதான். 1990 ல் எனக்கு 6 வயது என்றால்சரிதான். தாவா சொத்தை நான் அளந்து பார்த்தது கிடையாது என்றால்சரிதான். எனவே சொத்தின் அமைப்புகள் மற்றும் அளவுகள் தெரியாது என்றால்சரிதான். ராமசாமி, ராமஜெயம் ஆகியோர் வீடு விஜயராஜ் வீட்டிற்கு வடக்கே உள்ளது. விஜயராஜ் வீட்டிற்கு வடக்கே கிழமேல் முடுக்கு உள்ளது என்றால் ராமசாமி, ராமஜெயம் மற்றும் விஜயராஜ் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட பொது முடுக்கு உள்ளது. அந்த பொது முடுக்கின் 3 அடி என்றால்சரிதான்.

3. வாதியின் முன் ஆவணத்தில் ராமசாமி, ராமஜெயம் ஆகியோர் வீட்டிற்கு பொது சுவரின் தெற்கே உள்ள பகுதியை தான் கிரையம் பெற்றுள்ளார்

என்றால் அது பொது சுவர் கிடையாது. வாதி தரப்பு ஆவணங்களில் ராமசாமி, ராமஜெயம் ஆகியோர் சுவற்றிற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தை தான் வாதி கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் அது வாதிக்கு பாத்தியப்பட்டது. அதில் ஒரு முடுக்கு உள்ளது. என் தாயாரும், வாதிகளின் தாயாரும் உறவினர் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் என் உறவினர்கள். பிரதிவாதிகள் என் உறவினர்கள் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் ஓட்டு வீடு 50 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட வீடு என்றால் 2015ல் கூரை வீட்டை மாற்றி ஓட்டு அமைத்தார்கள்.

4. வாதியின் வீட்டின் தெற்கே உள்ள 3 அடி அகலமுள்ள முடுக்கு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.